# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1598 - 2009 අප්‍රේල් මස 17 වැනි සිකුරාදා - 2009.04.17

*1598 ஆம் இலக்கம் – 2009 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் – வெற்றிடம் | 454 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 459 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வராராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பததிர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2009, ஏப்பிறல் மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2009, ஏப்பிறல் மாதம் 08 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2009 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத்தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந்திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந்திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந்திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந்தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பதிவாளர் பதவி - கொழும்பு மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

3. இப்பதவிக்காக ஆண்/பெண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

4. விண்ணப்பதாரரின் வயது 21 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 65 வருடங்களுக்கு மேற்படாதும் இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

6. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரங்கள் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

7. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

8. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2009, மே மாதம் 18 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
இல. 234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.
2009, பங்குனி மாதம் 11 ஆந் திகதி.

**அட்டவணை**

| | மாவட்டம் | பிரதேச செயலக பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|---|
| 1 | கொழும்பு | கொழும்பு | அலுத்கட பிரிவு பிறப்பு, இறப்பு வைத்திய பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், கொழும்பு 12 |
| 2 | கொழும்பு | கொழும்பு | நியூ பசார் பிரிவு பிறப்பு, இறப்பு வைத்திய பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், கொழும்பு 12 |
| 3 | கொழும்பு | கொழும்பு | மருதானை பிரிவு பிறப்பு, இறப்பு வைத்திய பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், கொழும்பு 12 |
| 4 | கொழும்பு | கொழும்பு | மோதரை பிரிவு பிறப்பு, இறப்பு வைத்திய பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், கொழும்பு 12 |
| 5 | கொழும்பு | கொழும்பு | கொட்டாஞ்சேனை பிரிவு பிறப்பு, இறப்பு வைத்திய பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், கொழும்பு 12 |

## புத்த சிராவக்க பிக்குப் பல்கலைக்கழகம் - அநுராதபுரம்

மஹோபாத்தியாய பதவி

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட 1996 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க புத்தசிராவக்க பிக்குப் பல்கலைக்கழக சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட புத்தச் சிராவக்க பிக்குப் பல்கலைக்கழகத்தின் 'மஹோபாத்தியாய' பதவிக்காக விண்ணப்பங்கள் பொருத்தமானவர்களிடம் இருந்து கோரப்படுகின்றன :-

**விண்ணப்பதாரி** :-

(1) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பௌத்த கல்வியில் பட்டப் பின் படிப்பினை பூர்த்தி செய்தவராகவும்;

(2) உபசம்பதா பெற்றபின் 20 வருடங்கள் பூர்த்தியானவராகவும்;

(3) தொடர்பு மொழிகளில் பாண்டித்தியம் உடையவராகவும், அத்துடன் தர்மத்தையும் ஒழுக்க விதிகளையும் கடைபிடிக்கும் பிக்குவாகவும் இருத்தல் வேண்டும்.

'மஹோபாத்தியாய' 03 வருட காலத்திற்கு பதவி நியமனம் பெறுவார். அவர் பல்கலைக்கழகத்தில் முழு நேர உத்தியோகத்தராகவும் முதன்மை நிறைவேற்று அதிகாரியாகவும் இருப்பதுடன் பல்லைக்கழகத்தில் ஒழுக்கத்தை நடைமுறைப்படுத்துவதற்கும், மற்றும் கல்வி, நிர்வாக விடயங்கள் தொடர்பாக நிர்வாக சபையினாலும் ஆலோசனை சபையினாலும் எடுக்கப்படும் தீர்மானங்களை நிறைவேற்றுவதற்குத் தனியாக பொறுப்புடையவராகவும் இருப்பார்.

குறிப்பிட்ட விண்ணப்பதாரி பிக்குமார் 2009 ஆம் ஆண்டு யூலை மாதம் 07 ஆந் திகதியன்று 62 வயதிற்கு மேற்படாதவராக இருக்க வேண்டும். மஹோபாத்தியாயர் 3 வருட காலம் அல்லது 65 வயது பூரணமாகும் வரை அல்லது இவ்விரண்டில் முதல் வரும் சந்தர்ப்பம் அல்லது அப்பதவியை தாங்கலாம்.

மஹோபாத்தியாய அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட மாதாந்த சம்பளத்தையும் ஏனைய படிகளையும் பெற்றுக் கொள்வதற்கு உரித்துடையவராவர். பல்கலைக்கழக முறை, அரசசேவை, கூட்டுத்தாபனம் அல்லது நியதிச் சட்ட சபைகளில் கடமையாற்றும் விண்ணப்பதாரிகள் குறிப்பிட்ட நிறுவனத் தலைவருக்கூடாக, குறிப்பிட்ட விண்ணப்பதாரி தெரிவு செய்யப்படும் சந்தர்ப்பத்தில் விடுவிக்கப்படுவார் என வெளிப்படுத்தக்கூடிய வகையில் நிறுவனத் தலைவரின் சம்மதக் கடிதத்துடன் அனுப்புதல் வேண்டும். இவ்வசனம் அனுராதபுர புத்தச் சிராவக்க பிக்குப் பல்கலைக்கழகத்திலுள்ள விண்ணப்பதாரிகளுக்கு தொடர்புடையதல்ல. விடுதி வசதிகள் பல்கலைக்கழகத்தால் வழங்கப்படுகின்றன.

மஹோபாத்தியாய பதவி பெற்ற பொழுது எதிர்வரும் 03 வருடக் காலத்திற்குள், பல்கலைக்கழகத்தின் முன்னேற்றத்திற்காக செய்ய எதிர்பார்த்துள்ள சேவைகளை பற்றி தெரிவிக்கும் கடிதமும், விண்ணப்பதாரியான தனது சுயவிபரங்களும் பட்ட விஷய சம்பந்தமான விபரங்களும் அடங்கிய விண்ணப்பங்களை தயாரித்து ''பதிவாளர் அல்லது செயலாளர், புத்தசிராவக்க பிக்குப் பல்கலைக்கழகம், நந்தன மாவத்தை, அநுராதபுரம்'' என்ற முகவரிக்கு 2009 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 20 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''மஹோபாத்தியாய பதவி'' எனக் குறிப்பிடப்பட வேண்டும்.

பதிவாளர்/செயலாளர்,
ஆலோசனைச் சபை.

புத்தசிராவக்க பிக்குப்பல்கலைக்கழகம்,
நந்தன மாவத்தை,
அநுராதபுரம்,
2009.03.18.

4-326

## இலங்கை நிரந்தர வான்படை

வான்படை வீராங்கனைகளுக்கான வெற்றிடங்கள்

இலங்கை நிரந்தர/தொண்டர் வான்படையில் கீழே தரப்பட்டுள்ள தொழில் துறைகளில், வான்படை வீராங்கனைகளுக்கான வெற்றிடங்கள் கோரப்பட்டுள்ளன.:-

1.(அ) **தொழில் துறைகளும் தேவைப்படும் கல்வித் தகைமைகளும்**.-

| | |
|---|---|
| *தாதி உதவியாளர் - (நிரந்தர) – பல்வைத்திய உதவியாளர் (நிரந்தர)* | க. பொ. த. (சா.த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/ தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் ஆகியவற்றில் திறமைச் சித்தியும் மேலதிகமாக ஒரு பாடத்தில் திறமைச் சித்தியும் , ஆங்கிலத்தில் சித்தியும் உட்பட (மேலதிக கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) 6 பாடங்களில் சித்திகள், க. பொ. த. (உ/த) பரீட்சையில் ஓரே அமர்வில் உயிரியல் விஞ்ஞானம், இணைந்த கணிதம், பௌதீகவியல், இரசாயனவியல், விவசாயம் ஆகியவற்றில் 03 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் மேலதிக தகைமையாகவும், உயர் பயிற்சி நெறிக்கான தகைமையாகவும் கருதப்படும். |
| *பெண் பொலிஸ் – (நிரந்தர)* | க. பொ. த. (சா.த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/ தமிழ் மொழி, ஆங்கிலத்தில் சித்தி உட்பட (மேலதிக கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) 6 பாடங்களில் சித்திகள், |
| *இசை கலைஞர் - நடனம்/பாடகி (நிரந்தர)* | க. பொ. த. (சா.த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழியில் சித்தி உட்பட 6 பாடங்களில் சித்திகள், சங்கீதம், பாடும் திறமை தொடர்பான அறிவும் அனுபவமும் விசேட தகைமையாகக் கருதப்படும். |
| *சீருடை தயாரிப் – பாளர் (தொண்டர்)* | க. பொ. த. (சா.த.) பரீட்சைக்கு தோற்றி இருத்தல் அத்துடன் ஏதாவதொரு ஆடைத் தொழிற்சாலையில் ஒருவருட அனுபவமும் புடவை வெட்டுதல், தைத்தல், தயாரித்தல், ஓவர்லொக் இயந்திரம் இயக்குநர் போன்ற வற்றில் அனுபவம். |

ஆ. **ஏனைய தகைமைகள்**.-இலங்கை நிரந்தர/ தொண்டர் வான்படையில் இணைவதற்கு பின்வரும் பொதுத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(1) *தேசிய இனம் :* ஓர் இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்;

(2) *வயது:* (நிரந்தர) 2009 யூலை மாதம் 20 ஆந் திகதியன்று 18 வயதிற்கு குறையாமலும் 22 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்;
(தொண்டர்) - 2009, யூலை மாதம் 20 ஆந் திகதியன்று 18 வயதிற்குக் குறையாமலும் 25 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(3) *உயரம் :-* 5 அடி 4 அங்குலமும் அதற்கு மேலும் ;

(4) *உடல் நிறை:* உடற்பருமன் சுட்டி (BMI) = $\frac{\text{நிறை (கி. கி.)}}{\text{உயரம் (மீ) 2}} < 25$

(5) பார்வை வர்ணப்பதிவு மட்டம் : CP 2

(6) தொலை பார்வை: இரண்டு கண்களிலும் 6/6 (மூக்குக் கண்ணாடி பயன்படுத்தப்படாமல்)

(7) குடியியல் நிலை : விவாகமாகாதவராக இருத்தல் வேண்டும். (வான்படையில் இணைந்து இரண்டு ஆண்டுகள் பூர்த்தியடைவதுடன் தொழிற் பயிற்சியை பூர்த்தி செய்து ஓராண்டு கழிந்த பின்பு ஏற்படும் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப விவாகம் செய்ய அனுமதி வழங்கப்படும்).

2. பந்தி 01 'அ' இல் தேவைப்படும் கல்வித்தகைமைகளை கொண்டிராதவர்களும் பந்தி 01 'ஆ' இல் தேவைப்பாடுகளை நிறைவு செய்யாதவர்களுமான விண்ணப்பதாரிகள் நிராகரிக்கப்படுவர். முதலாவது நேர்முகப் பரீட்சைக்கு சமூகமளித்தவுடன் உயரம் கண் பார்வை பரிசீலிக்கப்படும், வர்த்தமானியில் குறித்துரைக்கப்பட்ட உடற் தகைமை மட்டத்தைக் கொண்டிராத விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படமாட்டார்கள்.

3. விளையாட்டுத் துறையில் சிறந்த சாதனைகள் இருப்பின் முறையாக கவனத்திற் கொள்ளப்படும்.

4. **சேவை நிபந்தனைகள்**.- (அ) வான்படை வீராங்கனைகள் சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட தேதியிலிருந்து வான்படை சட்டத்திற்கும் ஏனைய வான் படை ஒழுங்கு விதிகளுக்கும் வேறு கட்டளைகளுக்கும் உட்பட்டவர்களாவர்.

(ஆ) தெரிவு செய்யப்படும் தொழில் துறைக்குரிய வான்படை வீராங்கனைகளுக்கு அடிப்படை பயிற்சியும் அதன் பின் தொழில் துறைப் பயிற்சியும் வழங்கப்பட்டு அவர்கள் இலங்கையின் எந்தப் பிரதேசத்திலும், மிகக் கஷ்டமான நிலைமையிலும் இரவு பகலாக தமது தாய் நாட்டுக்குள் அல்லது வெளிநாடுகளில் சேவையாற்ற ஆயத்தமாதல் வேண்டும்.

5. **தொழிலில் அமர்த்தப்படுத்தல் பற்றிய நிபந்தனைகள்** :

நிரந்தர- தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் நிரந்தர வான்படையில் மூன்றாம் தர வானூர்தியாளர் தரத்தில் சேர்க்கப்பட்டு 12 ஆண்டுகள் சேவையாற்றுதல் வேண்டும். அதில் தொடர்ச்சியாக 05 ஆண்டுகள் சேவையாற்றுமாறு உடன்படிக்கை ஒன்றை செய்து கொள்ளுமாறு கேட்கப்படுவார்கள். மேலும் 05 ஆண்டுகள் பூர்த்தியானதும் அதிலிருந்து இன்னும் 07 ஆண்டுகள் மீண்டும் நிரந்தர உப சேவையில் சேவையாற்றுதலானது மீண்டும் அழைக்கப்படும் போது சமுகமளிக்க வேண்டும். 05 ஆண்டுகள் கழிந்த பின் மீண்டும் சேவையில் சேர்த்துக் கொள்ளப்படும். பொருட்டு பொருத்தமான வானூர்தியாளர்களுக்கு சந்தர்ப்பங்கள் உண்டு.

தொண்டர் - தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் தொண்டர் வான்படையில் மூன்றாம் தர வானூர்தியாளர் தரத்தில் சேர்க்கப்பட்டு தொடர்ச்சியாக 05 ஆண்டுகள் சேவையாற்றுதல் வேண்டும். 5 ஆண்டுகள் கழிந்த பின் தமது வயது எல்லை 50 ஆகும் வரையில் சேவைக் காலத்தை 5 ஆண்டுகளால் நீட்டிக்கொள்ளலாம்.

6. **அரசகரும மொழித் தேவைப்பாடுகள்**.-தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் இலங்கை அரசாங்கத்தின் அரச கரும மொழிக் கொள்கைக்கு இணங்கியிருத்தல் வேண்டும்.

7. **சம்பளமும் கொடுப்பனவுகளும்**.- (அ) ஒரு வருடத்திற்கு வான்படை வீராங்கனைகளுக்கு ஏற்புடையதாக திரட்டப்பட்டுள்ள சம்பள விகிதங்கள் பின்வருமாறு :-

| | |
|---|---|
| வானூர்தியாளர் | : ரூபா 1,66,560 - 7× 1,440 - 19 × 1,800 - ரூபா 2,10,840 |
| முன்னணி வானூர்தியாளர் | : ரூபா 1,70,880 - 4 × 1,440 - 19 × 1,800 - ரூபா 2,10,840 |
| கோப்ரல் | : ரூபா 1,75,200 - 1 × 1,440 - 10 × 1,800 - 9× 2520 - ரூபா 2,17,320 |
| சார்ஜன்ட் | : ரூபா 1,80,240 - 3 × 1,800 - 9 × 2,520-3 × 3,480 - ரூபா 2,18,760 |
| பிளைட் சார்ஜன்ட் | : ரூபா 1,83,840 — 1 X 1,800- 9 × 2,520 - 3 × 3,480 - ரூபா 2,18,760 |
| அதிகாரம் பெற்ற அலுவலர் | : ரூபா 2,11,800 - 13 × 3,480 - ரூபா 2,57,040 |

மேற்குறிப்பிட்ட சம்பள திரட்டு விகிதங்களுக்கு ஏற்புடையதாக சம்பள கொடுப்பனவுகள் வழங்கப்படும். சேவை காலத்தில் அவரவர் நன்னடத்தை சேவை ஆற்றல் ஆகியவற்றிற்கிணங்க உயர் நிலைகள் கிடைக்கப்பெறுவதுடன் அதற்கிணங்க சம்பள விகிதங்களும் திருத்தப்படும்.

(ஆ) **வேறு கொடுப்பனவுகள்**.-

(1) வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு 4,500

(2) கடினப் படி : மாதமொன்றுக்கு ரூபா 600.

(3) கஷ்டப் பிரதேசங்களில் சேவை புரிபவர்களுக்கு மேலதிகமாக மாதமொன்றுக்கு ரூபா 3,900 வழங்கப்படும்.

(4) விசேட கடினப் படி.- விசேட கொடுப்பனவு யாழ் குடாநாட்டில் பணிபுரிபவர்களுக்கு மாதமொன்றுக்கு ரூபா 2,400 வழங்கப்படும். (ஒவ்வொரு வேலை நாட்களுக்கும் ரூபா 80.00 வீதம்)

(5) உற்சாகமூட்டும் கொடுப்பனவு.-சேவைக்காலம் 5 வருடம் பூர்த்தியடைந்த பின் இக்கொடுப்பனவு வழங்கப்படும். (மாதமொன்றுக்கு ரூபா 250.00 இருந்து ரூபா 850.00 வரை)

(6) உணவு கொடுப்பனவு.- வெளியில் தங்கும் வான்படை வீராங்கனைகளுக்கு மாதமொன்றுக்கு ரூபா 5,649.75 (உள்ளே தங்கும் வான்படை வீராங்கனைகளுக்கு இலவச உணவு வசதி)

(7) தங்குமிட வசதி.- உள்ளே தங்கும் வான்படை வீராங்கனைகளுக்கு இலவசம்.

(8) பிரயாணம்.- ஆண்டொன்றுக்கு மூன்று சோடி விடுமுறை புகையிரதப் பயணச் சீட்டுகள் (வீராங்கனைகளுக்கும் கணவருக்கும் பிள்ளைகளுக்கும்) உள்ளே தங்கியிருக்கும் வான்படை வீராங்கனைகளுக்கு மாதமொருதடவை சொந்த இருப்பிடம் போய்வருவதற்கு மேலதிகமாக ஒரு சோடி புகையிரதப் பிரயாணப் பத்திரம் அல்லது பஸ் வண்டிக் கட்டணம் செலவின மீளளிப்பு.

(9) கலவரகாலப் படி.-நிரந்தரமான நிலையங்களுக்கு வெளியே கடமைக்குச் செல்லும் போது இக்கொடுப்பனவு வழங்கப்படும் (விவாகமானவர் விவாகமாகாதவர் என்பதற்கிணங்க கொடுப்பனவு வேறுபடும்);

(10) தகைமைச் சம்பளம்.- விசேட பயிற்சி நெறியில் தகைமை பெற்றவர்களுக்கு அல்லது வான்படைச் சேவைக்கு விசேட பெறுமதிவாய்ந்த தகைமை கொண்டிருப்பவர்களுக்கு இத்தகைமைச் சம்பளம் வழங்கப்படும். மாதமொன்றுக்கு ஆகக்கூடிய தொகை ரூபா 637.50 வழங்கப்படும்.

(11) நன்னடத்தைப் பதக்கம் சம்பளம்.- மிக உயர்ந்த தரத்திலான நடத்தையும் பொது ஒழுக்கமும் கொண்ட ஆளனியினருக்கு மாதமொன்றுக்கு ரூபா 30.00 இருந்து 204 வரை வழங்கப்படும்.

(12) சீருடை கொடுப்பனவு மாதமொன்றுக்கு ரூபா 170 வழங்கப்படும்.

(13) மீள அமர்த்தலுக்கான சம்பளம்.-மீள அமர்த்தப்பட்ட காலப் பகுதியின்போது மாதமொன்றுக்கு ஆளணியினர் 300.00 ரூபாவுக்கு உரித்துடையவராவர்.

(14) மருத்துவம், வான்படையின் செலவில் வான்படை வீராங்கணைகளுக்கும் திருமணமாயின் அவர்களது குடும்பத்தினருக்கும் இலவச மருத்துவ வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

(15) வெளியில் தங்கியிருப்பவர்களும் வேலைத்தலத்திலிருந்து 30 மைல் (கி. மீ. 48) சுற்றுவட்டத்தில் வாழ்பவர்களுமான வான்படை வீராங்கனைகளுக்கு இ. போ. ச. பேரூந்து வண்டிகளில் வேலைக்கென இலவசமாக பிரயாணச் சீட்டு வழங்கப்படும்.

(16) விவாவகமான வான்படை வீராங்கனைகளுக்கு அரசாங்கத்திற்குரிய விவாகமானவர்களுக்கான விடுதியில் குடியிராவிடில் மாதமொன்றுக்கு ரூபா 1,200.00 இலிருந்து 3,300.00 வரை வாடகைப் படியொன்றுக்கு உரித்துடையவரா வர்.

(17) விரிவுரையாளர் கொடுப்பனவு.- மாதமொன்றுக்கு ரூபா 425.00 இலிருந்து 510.00வரை கொடுப்பனவுக்கு உரித் துடையவராவர்.

(18) வேறு கொடுப்பனவுகள்.- (பிரிந்திருக்கும் அல்லது வெளிநாடுகளில் சேவையாற்றுதல்) இலங்கை வான்படை சம்பள சட்டத்திட்டங்களுக்கு அமைய இக்கொடுப்பனவு வழங்கப்படும்.

(19) ஓய்வூதியங்கள்/பணிக்கொடுப்பனவு என்பன காலத்துக்கு காலம் திருத்தப்படடவாறான 1981 ஆம் ஆண்டின் வான்படை ஓய்வூதிய/ பணிக்கொடுப்பனவு சட்டக் கோவையின் நியதிகளின்படி செலுத்தப்படும். வான்படை வீராங்கனைகள் அனைவரும் விதவைகள், அனாதைகள் ஓய்வூதிய (ஆயுதப்படைகள்) திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துநர்களாவர். உதவுதொகைகளின் விகிதங்கள் 1970 ஆம் ஆண்டின் விதவைகள், அனாதைகள், ஓய்வூதிய (ஆயுதப்படை) திட்டத்தின் படியாகும்.

8. **விண்ணப்பதாரர்களுக்கான அறிவுறுத்தல்கள்**.- (அ) விண்ணப்பங்கள் கீழே கொடுக்கப்பட்ட படிவத்தின் நியதிகளின்படி சமர்ப்பிக்க வேண்டும். எல்லாக் கூடுகளும் கூடியளவு விரிவான விவரங்களுடன் தெளிவாக தமது கையெழுத்தால் நிரப்பப்பட வேண்டும். விண்ணப்பங்கள் 2009, ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன் "பிரதான ஆட்சேர்ப்பு அதிகாரி, ஆள்திரட்டற் சபை, இலங்கை வான்படை, ஏக்கல, கொட்டுகொட" என்ற முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். (பதிவுத் தபாலில் அனுப்பாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா). விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் ''வான்படை வீராங்கனைகளுக்கான விண்ணப்பம்'' எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும். ஒரு விண்ணப்பதாரர் ஒரு தொழிலுக்கு மாத்திரம் விண்ணப் பிக்க வேண்டும். அத்தோடு ஒன்றுக்கு மேற்பட்ட தொழில்களுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். முடிவு தேதியின் பின்னர் கொட்டுகொட, ஏக்கல, இலங்கை வான்படையை வந்தடைவனவும், இந்த அறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கு அமை யாதவையுமான விண்ணப்பங்கள் கவனத்தில் கொள்ளப்படமாட்டா.

(ஆ) அரசாங்க சேவையில்/ கூட்டுத்தாபனத்தில்/ சபையில்/ குடியியல் தாபனத்தில் உள்ள விண்ணப்பதாரர்களது விண்ணப்பம் தத்தம் திணைக்களத்தின் / சபையின் / குடியியல் தாபனத்தின் தலைமையதிகாரிகள் ஊடாகவே அனுப்புதல் வேண்டும். இந்த விண்ணப்பங்கள், விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படின் விடுவிக்கப்படுவர் என்ற சான்றிதழொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(இ) விண்ணப்பகாரரகள் நேர்முக பரீட்சைக்கு அழைக்கப் படும்போது பின்வரும் ஆவணங்களின் மூலப் பிரதிகளை சமர்ப்பிக்கு மாறு தேவைப்படுத்தப்படுவர் :-

(1) பிறப்புப்பதிவு சான்றிதழ் மூலப்பிரதி (கல்விச் சட்டக் கோவையின் நோக்கத்திற்காக வழங்கப்பட்ட சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா).

(2) தேவைப்படுத்தப்பட்ட கல்வித் தகைமைக்கு ஆதாரமான சான்றிதழ்.

(3) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிடமிருந்து பெற்ற தொழில்துறை/தொழில்நுட்பப்பயிற்சி அத்துடன்/அல்லது அனுபவம் ஏதுமிருப்பின் அது தொடர்பான சான்றிதழ்

(4) இரண்டு நற்குணச் சான்றிதழ்களைப் பெற்றிருத்தல் வேண்டும். இவற்றுள் ஒன்று இறுதியாக கல்வி பயின்ற பாடசாலை அதிபரினதும், மற்றையது விண்ணப்பதாரரை தனிப்பட்ட முறையில் நன்கறிந்த பொறுப்புவாய்ந்த ஒருவரிடம் இருந்து அல்லது விண்ணப்பதாரரின் தொழில் தருநரிடமிருந்து (தொழில் புரிபவராயின்).

(5) விளையாட்டுத்துறை நடவடிக்கைகள் கெடெற்றிங் முதலியவற்றிற்கு ஆதாரமான சான்றிதழ்கள்.

(ஈ) ஆவணங்களைச் சமர்ப்பிக்குமாறு கோரப்படும் போது அவற்றைச் சமர்ப்பிக்கத்தவறும் விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் கவனத்தில் கொள்ளப்படமாட்டா.

(உ) ஆவணங்களோ ஆவணங்களின் பிரதிகளோ விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கப்படுதலாகாது.

(ஊ) விண்ணப்பப்படிவத்துடன் சேர்த்து சான்றிதழ்களின் எவையேனும் மூலப்பிரதிகள் அனுப்பப்படின் அவை காணாமற் போனமைக்கு வான்படை பொறுப்பல்ல.

9. நேர்முகப் பரீட்சை இலங்கை வான்படையின் ஏக்கல நிலையத்தில் நடைபெறும். நேர்முக பரீட்சைக்குத் தகுந்தவரெனக் கருதப்படும் விண்ணப்பதாரர்கள் விமானப் படை ஆள்திரட்டற் சபையொன்றின் முன்னிலையில் தங்கள் சொந்தக் செலவில் நேர்முகப் பரீட்சையொன்றுக்குத் தோற்றுதல் வேண்டும். விண்ணப்பதாரர்களுக்கு தேதி நேரம் என்பன தனித்தனியாக அறிவிக்கப்படும்.

10. விண்ணப்பதாரியொருவர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக் கப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தேசிய அடையாள அட்டை சமர்ப்பித்தல் வேண்டும். தேசிய அடையாள அட்டை வைத்திராத விண்ணப்பதாரர்கள் வேறு ஏதேனும் விதமான ஏற்றுக்கொள்ளத்தக்க அடையாளமொன்றை சமர்ப்பிக்கலாம். ஆயினும் எந்தவொரு விண்ணப்பதாரரும் தேசிய அடையாள அட்டையின்றி சேர்த்துக் கொள்ளப்பட மாட்டார்.

11. தங்கள் இறுதி நேர்முகப் பரீட்சைகளையடுத்து பொருத்த மானவர்களாக இருக்கக்கூடிய விண்ணப்பக்காரர்கள் வான்படை மருத் துவச் சபையொன்றின் முன்னிலையில் தோற்றுமாறு தேவைப்

படுத்தப்படுவர். பொருத்தமான விண்ணப்பதாரர்கள் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் வரிசைப்படுத்தப்பட்டு வான்படையின் தொழிற்தேவைப்பாடுகளின் அடிப்படையில் உயர் புள்ளி மட்டத்தில் இருந்தே தேர்வு செய்யப்படுவர்.

12. விண்ணப்பதாரரொருவருக்கு விதப்புரை வழங்க விரும்பும் எவரும் நற்சாட்சிப்பத்திரமொன்றை வழங்குவதன் மூலம் அவ்வாறு செய்தல் வேண்டும். ஏதேனும் விதத்தில் ஆதரவு தேடுதல் அல்லது விண்ணப்பதாரரொருவரின் தெரிவுக்கு செல்வாக்கைப் பயன்படுத்த எத்தனித்தல் அத்தகைய விண்ணப்பதாரரை தகைமையிழக்கச் செய்யும்.

13. விண்ணப்பத்தில் பிழையான தகவல் காணப்படும் ஏதேனும் கூற்று அத்தகைய பிழை தெரிவுக்கு முன்னர் கண்டுபிடிக்கப்படின் தகையிழப்பிற்கும் தெரிவுக்கு பின்னர் கண்டுபிடிக்கப்படின் பதவி நீக்கத்திற்கும் விண்ணப்பகாரரை ஆளாக்கிவிடும்.

14. நேர்முகப்பரீட்சைகளில் சித்திபெறாத விண்ணப்பதாரர்களுக்கு அதுபற்றி அறிவிக்கப்படமாட்டாது.

டப்ளியு. டி. ஆர். எம். ஜே. குணதிலக,
எயார் மாஷல்,
வான் படை தளபதி.

தலைமை அலுவலகம்,
இலங்கை வான் படை,
த. பெ. எண் 594,
கொழும்பு.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை வான்படை வீராங்கனைக்கான பதவி**

1. முழுப்பெயர் :----.
(தேசிய ஆளடையாள அட்டைப்படி)

2. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :----.

3. விண்ணப்பிக்கும் தொழில் துறை

4. அஞ்சல் முகவரி :-----.

5. நிரந்தர முகவரி :----.

6. நிரந்தர முகவரியின் பொலிஸ் நிலையம் :-----.

7. மாவட்டம் :-----.

8. தேர்தற் தொகுதி :-----.

9. கிராம உத்தியோகத்தர் பிரிவு :-----.

10. தொலைபேசி இலக்கம் :----.

11. பிறந்த திகதி :
ஆண்டு :----. மாதம் :----. திகதி :----.

12. விவாகமானவரா/விவாகமாகாதவரா? :----.

13. உயரம் :- அடி : ---- அங்குலம் :----.

14. க.பொ. த. (சா.த.) பரீட்சை:

| ஆண்டு | மாதம் | சுட்டிலக்கம் | சித்தியடைந்த பாடங்கள் | பெற்ற தரங்கள் |
|---|---|---|---|---|
| | | | | |

15. க.பொ. த. (உ.த.) பரீட்சை:

| ஆண்டு | மாதம் | சுட்டிலக்கம் | சித்தியடைந்த பாடங்கள் | பெற்ற தரங்கள் |
|---|---|---|---|---|
| | | | | |

16. பதவிக்குரிய எவையேனும் விசேட தகைமைகள் :----.
(தொழில்நுட்பம், தொழிற்பயிற்சி அனுபவம் முதலியன)

17. விளையாட்டுத் துறையில் விசேட சாதனைகள் பற்றிய விபரம் :----.

18. பாடசாலையில் அல்லது வெளி ஒழுங்கமைப்புகளில் குறிப்பிடத்தக்க வேறு சாதனைகள்:-----.

19. ஆயுதப்படைகளுக்கு அல்லது பொலிஸ் சேவைக்கு இதற்கு முன்னர் விண்ணப்பித்திருந்தால் விவரங்கள் தரவும்:----.

20. நீர் குடியியல் அல்லது இராணுவ நீதிமன்றமொன்றினால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டுள்ளவரா ? :----.

21. நற்சாட்சிப்பத்திரங்கள் வழங்கியோர் பற்றிய விவரங்கள்:

| பெயர் | பதவி | நிரந்தர முகவரி |
|---|---|---|
| | | |

22. விண்ணப்பதாரரால் கையொப்பமிடவேண்டிய வெளிப்படுத்துகை -

மேலேயுள்ள வினாக்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள விடைகள் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் சரியானவை என என்மீது ஆணையாக வெளிப்படுத்துகிறேன். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை நிரந்தர வான்படையில் வான்படை வீரராக தெரிவு செய்யப்படும் விண்ணப்பகாரர்கள் தொடர்பில் கடைப்பிடிக்கப்படும் நடவடிக்கை முறையையும் அவற்றுக்குரிய விதிகளையும் நான் வாசித்து விளங்கிக்கொண்டுள்ளேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

4-453

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**காணி, காணி அபிவிருத்தி அமைச்சு**

இலங்கை நில அளவைத் திணைக்களம்

**நில அளவையாளர் நாயகத்தின் உத்தரவு பெற்ற படவரைஞர் சான்றிதழ் வழங்குவதற்காக நடாத்தப்படும் பரீட்சை-2009**

நிள அளவையாளர் நாயகத்தால் உத்தரவு பெற்ற படவரைஞராக தொழில் புரிவதற்கான சான்றிதழ் வழங்குவதற்கான பரீட்சை கொழும்பில் நடைபெறும். பரீட்சை இரண்டு பகுதிகளாக நடைபெறும்.

பகுதி I - ஆள் கூற்றுக் கணிப்பு.
பகுதி II- படம் வரைதல்.

2. முதலாவது பகுதிப் பரீட்சை 2009ஆம் ஆண்டு ஆனி மாதம் 20 ஆந் திகதியும் இரண்டாவது பகுதிப் பரீட்சை 2009 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 22 ஆந் 23 ஆந் திகதிகளிலும் நடைபெறும். முதற் பரீட்சையில் சித்தியடையாத பரீட்சார்த்திகள் இரண்டாவது பரீட்சைக்கு அனுமதிக்கப்படமாட்டார்கள். சான்றிதழ் வழங்குவதற்கான தகுதியைப் பெறுவதற்கு பரீடசார்த்திகள் ஒரே தடவையில் பகுதி I, பகுதி II ஆகிய இரு பரீட்சைகளிலும் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.

3. பரீட்சார்த்திகள் பின்வருவனவற்றைச் செய்ய முடியுமென்பதில் என்னைத் திருப்திப்படுத்த வேண்டும்:-

(அ) புலக் குறிப்பிலிருந்து ஆள் கூற்றுத் தாள் ஒன்று தயார் செய்து அளவைப் போகு ஒன்றின் ஆள் கூற்றைக் கணித்தல்.

(ஆ) புலக் குறிப்பிலிருந்து ஒரு படத்தை பாகை மானி மூலமாகவும் ஆள் கூறு மூலமாகவும் சரியாகக் குறித்து பரப்பளவுகளைச் சரியாகக் கணித்தல்.

4. பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கீழ்த்தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய தயாரித்து ரூபா 300.00 கட்டணத்துடன் பதிவுத் தபால் மூலம் “சிரேஸ்ட நிலஅளவை அத்தியட்சகர் (பரீட்சை), அளவையியல் படமாக்கல் நிறுவனம், தியதலாவை” என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். கட்டணம் முத்திரைகளாகவோ காசோலைகளாகவோ ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. காசுக் கட்டளைகள் “சிரேஷ்ட பிரதி நிளஅளவையாளர் நாயகம் (நிளஅளவை பயிற்சி நிறுவனம்), அளவையியல் படமாக்கல் நிறுவனம், தியதலாவை” என்னும் பெயரில் எடுக்கப்படல் வேண்டும். கட்டணம் பணம் மூலம் செலுத்துவதானால் ‘‘அளவையியல் படமாக்கல் நிறுவனம், தியதலாவை’’யில் செலுத்தலாம். மூலப் பற்றுச்சீட்டு அல்லது மூலக் காசுக் கட்டளையை இணைக்கவும் (அவற்றை ஒட்ட வேண்டாம்.). தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் “நிலஅளவையாளர் நாயகத்தின் உத்தரவு பெற்ற படவரைஞர் சான்றிதழ் வழங்குவதற்காக நடாத்தப்படும் பரீட்சை-2009” என எழுதப்படவேண்டும்.

5. எக்காரணம் கொண்டும் பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப் படமாட்டாது.

6. 2009 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 25 ஆந் திகதிக்குப் பின்னர் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

7. வரைபுத்தாள்களும் ஆள் கூற்றுத் தாள்களும் பரீட்சை மண்டபத்தில் வழங்கப்படும். இருந்தும் வரைதல் உபகரணங்கள் ஆள் கூற்றுக் கணிக்கும் கணித வாய்ப்பாடுகள் மற்றும் அவர்களுக்கு வேண்டிய உபகரணங்கள் யாவும் அவர்களே கொண்டு வருதல் வேண்டும். பரீட்சை மண்டப மேற் பார்வையாளரின் அனுமதியுடன் சாதாரண கணிப் பொறிகள் (Non Programmable Scientific Calculators) பாவிக்க அனுமதிக்கப்படும்.

8.(i) பரீட்சைக்குத் தோற்றும் ஒவ்வொரு பரீட்சார்த்தியும் அவரை ஒவ்வொரு பாடத்திலும் பரீட்சிப்பதற்கு முன்பு, மேற்பார்வையாளரைத் திருப்திப்படுத்துமாறு தனது ஆள் அடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். கீழ்க் கண்ட ஏதாவது ஒரு ஆவணத்தைச் சமர்பித்தல் மூலம் அதை நிரூபிக்கலாம்.

(அ) ஆட்பதிவு திணைக்கள ஆணையாளரினால் வழங்கப்பட்ட அடையாள அட்டை.

(ஆ) ஒரு செல்லுபடியான கடவுச்சீட்டு.

(இ) ஒரு அரசாங்கத் திணைக்களத்தின் அதிகாரத்துடன் பரீட்சார்த்திக்கு மூன்று வருடங்களுக்குள் வழங்கப்பட்டதும், வைத்திருப்பவர் தனது நிழற் படத்தை கொண்டதுமான ஏதாவதொரு ஆவணம், சான்றிதழ் அல்லது உத்தரவுச் சீட்டு.

(ii) பந்தி 8(i) இல் வேண்டப்பட்ட அடையாளத்தை நிரூபிக்க இயலாத எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சிக்கப்படமாட்டார்.

9. இப்பரீட்சை மெற்றிக் முறையில் நடத்தப்படும்.

எஸ்.எம்.டபிள்யு.பிரனான்து
நில அளவையாளர் நாயகம்,

நில அளவையாளர் நாயகத்தின்அலுவலகம்,
த.பெ.இல. 506,
கிருல வீதி,
கொழும்பு 05.
2009.03.31

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை நில அளவைத் திணைக்களம்**

நில அளவையாளர் நாயகத்தின் உத்தரவு பெற்ற படவரைஞர் சான்றிதழ் வழங்குவதற்காக நடாத்தப்படும் பரீட்சை-2009

சுட்டிலக்கம் [ ]
(அலுவலக பாவனைக்கு)

(அ) i. முதலெழுத்துக்களுடன் பெயர் (திரு/திருமதி/செல்வி):---. ........................................................................................

ii. முதலெழுத்தைக் குறிக்கும் பெயர் :-----

iii. முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலத்தில்): Mr/Mrs/ Miss :-----

(ஆ) பால்:-----

(இ) பதவி:-----

(ஈ) தொழில் பார்க்குமிட முகவரி :-----

(உ) நிரந்தர முகவரி :-----

(ஊ) பிறந்த திகதி :-----

(எ ) சித்தியடைந்த உயர் பரீட்சையும் மொழியும் :-----

(ஏ ) பரீட்சார்த்தி இப்பரீட்சைக்கு தோற்ற உத்தேசித்திருக்கும் மொழி:- (சிங்களம் /தமிழ் /ஆங்கிலம்) :-----

(ஐ) செலுத்திய கட்டணம்:- ரூபா:-----

(ஒ) காசுக் கட்டளை இலக்கம்/பற்றுச் சீட்டிலக்கம்:-.......................... வழங்கிய அலுவலகம் :-----

திகதி:-----

(தியத்தலாவ அளவையியல் படமாக்கல் நிறுவனத்தில் செலுத்தப்பட்டிருப்பின் பற்றுச் சீட்டின் மூலப் பிரதியை அல்லது காசுக் கட்டளை மூலம் செலுத்தப்பட்டிருப்பின் அதன் மூலப் பிரதியை இணைக்கவும்)

மேற்கூறிய விபரங்கள் யாவும் சரியானதென்றும் மற்றும் உண்மையானதென்றும் உறுதிமொழிகின்றேன்.

....................................
கையொப்பம்

திகதி :-....................................

4-394

---

## தொழில்நுட்பவியல் நிறுவனம் - மொறட்டுவைப் பல்கலைக்கழகம்

### தொழில்நுட்பவியல் தேசிய டிப்ளோமா கற்கைநெறிக்கான அனுமதி – 2009/2010

மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின், தொழில்நுட்பவியல் நிறுவனத்தினால் நடாத்தப்படும் மூன்று வருடகால முழுநேர தொழில்நுட்பவியல் டிப்ளோமா கற்கை நெறிக்குத் தெரிவுசெய்வதற்காக தகுதிவாய்ந்த பரீட்சார்த்திகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படு கின்றன. இக்கற்கைநெறியானது, தொழில்நுட்பவியல் நிறுவனத்திற்கான புதிய கட்டிட நிலையங்களில் நடாத்தப்படும் வரை, மொறட்டுவைப் பல்கலைக்கழகக் கட்டிட நிலையங்களிலேயே நடத்தப்படும்.

1. **பொது**.-தொழில்நுட்பவியற் தேசிய டிப்ளோமா கற்கைநெறியானது இரண்டு வருட முழுநேர கற்றலையும் ஒரு வருட தொழிற் பயிற்சியையும் உள்ளடக்கியது. இதன் மொழி மூலம் ஆங்கிலம் ஆகும். கற்கைநெறிகள் பின்வரும் கற்கைத்துறைகளில் வழங்கப்படுகின்றது :-

(அ) கப்பற்றுறை கல்வியும் தொழில்நுட்பவியலும் (வகை 1)

(i) கடல்சார் எந்திரவியற் தொழில்நுட்பவியல் ;
(ii) கப்பற்றுறை கல்வியும் தொழில்நுட்பவியலும் ;

(ஆ) ஏனைய தெரிவுகள் (வகை 11)

(i) இரசாயன எந்திரவியற் தொழில்நுட்பவியல் ;
(ii) குடிசார் எந்திரவியற் தொழில்நுட்பவியல் ;
(iii) மின்சார எந்திரவியற் தொழில்நுட்பவியல் ;
(iv) இலத்திரன் தொலைத்தொடர்பு எந்திரவியற் தொழில்நுட்பவியல் ;
(v) பொறிமுறை எந்திரவியற் தொழில்நுட்பவியல் ;
(vi) பல்பகுதிய தொழில்நுட்பவியல் ;
(vii) புடவை மற்றும் ஆடைத் தொழில்நுட்பவியல்.

2. **தகைமைகள் :**

2.1 ***வயது மற்றும் பிற தகைமைகள்***.- (a) விண்ணப்பதாரிகள், 31.12.2008 ஆந் திகதியன்று 24 வயதிற்குக் குறைந்தவர்களாக இருத்தல் வேண்டும்.

(b) 31.12.2008 இல் 20 வயதிற்கு குறைந்த விண்ணப்பதாரர்களுக்குக் கப்பற்றுறைக் கல்வித் தொழில்நுட்வியல், கடல்சார் எந்திரவியற் தொழில்நுட்பவியல், பாடநெறிகளுக்கான அனுமதிக்கு முன்னுரிமை வழங்கப்படும். கப்பற்றுறை கல்வியும் தொழில்நுட்பவியலும் (வகை1) இற்கான விண்ணப்பதாரிகள் மருத்துவ பரிசோதனை மற்றும் நேர்முகப் பரீட்சை என்பவற்றுக்கு விசேடமாக தோற்றுதல் வேண்டும்.

(c) ஏதாவது பல்கலைக்கழகத்திலோ (இலங்கை திறந்த பல்கலைக் கழகம் தவிர்ந்த) உயர் கல்வி அமைச்சின் கீழ்வரும் உயர் கல்வி நிறுவனத்திலோ முழுநேர கற்கைநெறிக்கு பதிவுசெய்து கொண்டுள்ள மாணவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியற்றவர்கள் ஆவர்.

2.2 ***கல்வித் தகைமை***.- விண்ணப்பதாரிகள் இலங்கை பரீட்சைகள் ஆணையாளரினால் நடாத்தப்பட்ட க. பொ. த. (உ. த.) பரீட்சையில் கீழ்குறிப்பிட்டுள்ள பாடங்களில் மூன்றிற்கு (03) குறையாமல் சித்திபெற்றிருத்தல் வேண்டும் :-

(i) இணைந்த கணிதம்
(ii) உயர் கணிதம்
(iii) பௌதிகவியல்
(iv) இரசாயனவியல்

இலங்கை பரீட்சைகள் ஆணையாளரினால் 2006 அல்லது 2007 அல்லது 2008 ஆம் ஆண்டுகளில் நடத்தப்பட்ட க. பொ. த. (உ. த.) பரீட்சைகளில் ஒன்றில் ஒரே தடவையில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

3. **தெரிவு முறைமை:**

3.1 ***கற்கை அனுமதி***.- அனுமதிக்கான தெரிவானது க. பொ. த. (உ. த.) பரீட்சை பெறுபேற்றின் அடிப்படையிலும், மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்பவியல் நிறுவனத்தினரால் நடாத்தவிருக்கும் தகுதிகாண் பரீட்சை முடிவுகளிலும் தங்கியிருக்கும். தகுதிகாண் பரீட்சையில் சித்தி எய்தியவர்களில், க. பொ. த. (உ. த.) பரீட்சையில் அதிகூடிய பெறுபேற்றையுடையவர்கள், திறமை வரிசையில் தெரிவு செய்யப்படுவர். அதாவது இசற் மதிப்பீட்டு முறை (Z-Score) அடிப்படையாகக் கொள்ளப்படும். தெரிவு செய்யப்படுபவர் களில் 40% இனர் திறமை அடிப்படையிலும் 60% இனர் மாவட்ட- ஒதுக்கீடு அடிப்படையிலும் தெரிவு செய்யப்படுவர்.

3.2 ***கற்கைத் துறை***.- கற்கைத் துறைகளுக்கு மாணவர்களைத் தெரிவுசெய்கையில், தகுதிகாண் பரீட்சைப் பெறுபேறு, விண்ணப்பதாரியின் கற்கைத்துறை தெரிவு வரிசை என்பன இணைந்து கருத்திற்கொள்ளப்படும்.

4. **விண்ணப்பிக்கும் முறை** :

4.1 (i) *விண்ணப்பப்படிவம் :*
மாதிரி விண்ணப்பப்படிவம் மற்றும் தகவல்களை அரச வர்த்தமானியில் அல்லது பின்வரும் இணையதள முகவரியில் பெற்றுக்கொள்ளலாம் :

http://www.mrt.ac.lk/itum

(ii) விண்ணப்பப்படிவமானது, கடித உறையின் இடது மேல் மூலையில் "NDT Admission 2009/2010" என ஆங்கிலத்தில் குறிக்கப்பட்டு, "பிரதிப் பதிவாளர், தொழில்நுட்பவியல் நிறுவனம், மொறட்டுவை பல்கலைக்கழகம், கட்டுப்பெத்தை, மொறட்டுவை" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும்.

(iii) விண்ணப்பப்படிவமானது விண்ணப்ப முடிவுத் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ பிரதிப் பதிவாளர் தொழில்நுட்பவியல் நிறுவனம், மொறட்டுவைப் பல்கலைக்கழகம் என்ற முகவரிக்கு வந்தடைதல் வேண்டும்.

(iv) இரண்டு 9" x 4" முத்திரை ஒட்டிய கடித உறையில், (பெறுமதி ரூபா 40) உங்களது சுயவிலாசத்தை எழுதி விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பப்படுதல் வேண்டும்.

(v) விண்ணப்பங்கள் பூர்த்தியாக்கப்பட்டு, விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிட்டவாறு உள்ளடக்கப்பட்டவை உறுதிப்படுத்தப்பட்டு அனுப்பப்படல் வேண்டும். மூல அல்லது பிரதி ஆவணங்கள் தேவையில்லை (விண்ணப் பப்படிவத்தில்3, 4 மற்றும் 5 இனைப் பார்க்க.)

4.2 *கற்கைநெறிக்கான முன்னுரிமை :*

(i) இரண்டு வகையான கற்கைநெறிகள் உள்ளன.

(ii) விண்ணப்பதாரிகள் கப்பற்றுறைசார் கற்கை நெறி (வகை 1) அல்லது ஏனைய கற்கை நெறி (வகை 2) அல்லது இரண்டிற்கும் விண்ணப்பிக்கலாம். இரண்டிற்கும் விண்ணப்பிக்குமிடத்து உங்கள் விருப்பு வரிசையை தெரியப்படுத்தல் வேண்டும்.

(iii) வகை (1) இல் முதலாவது விருப்பு 1 எனவும் இரண்டாவது விருப்பு 2 எனவும் குறிப்பிடுக. கப்பற்றுறை சார் கற்கைநெறிக்கு விண்ணப்பிக்கும் மாணவர்களால் மாத்திரம் நிரப்பப்படல் வேண்டும்.

(iv) வகை (2) இல் முதலாவது விருப்பு 1 எனவும் இரண்டாவது விருப்பு 2 என்றவாறு உங்கள் விருப்புகளை (1, 2, 3, 4, 5, 6, 7) என குறிப்பிடுக.

5. (i) **விண்ணப்பக் கட்டணம்**.- ஏதாவதொரு வகை கற்கைநெறிக்கு ரூ. 300 (முந்நூறு ரூபா) உம் இரண்டு வகைகளுக்கு சேர்த்து விண்ணப்பிக்க விரும்பினால் ரூ. 500 (ஐநூறு ரூபா) உம் ஆகும். இதனை ஏதொவதொரு இலங்கை வங்கிக் கிளையில் மட்டும் "தொழில்நுட்பவியல் நிறுவனம், மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் இலங்கை வங்கி, கட்டுபெத்தை கிளையில்" உள்ள கணக்கு இல. 0000308280 க்கு செலுத்தி பெறப்பட்ட பற்றுச்சீட்டை விண்ணப் பப்படிவத்துடன் இணைத்து அனுப்பி வைக்கவும். விண்ணப்பக் கட்டணம் திருப்பிச் செலுத்தப்படமாட்டாது.

(ii) *விண்ணப்ப முடிவுத் திகதி*.- விண்ணப்ப முடிவுத் திகதி 2009, ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதியாகும். (30.04.2009)

6. **தகுதிகாண் பரீட்சை**.- ஒவ்வொரு மாவட்டத்திலும், அம்மாவட்டத்திற்குரிய க. பொ. த. (உ. த.) பரீட்சைப் பெறுபேற்றுக்கமைய நிரல்படுத்தப்பட்டு அதிகூடிய பெறுபேற்றையுடைய விண்ணப்பதாரிகளே தகுதிகாண் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். இப்பரீட்சை தொழில்நுட்பவியல் நிறுவனம், மொறட்டுவை பல்கலைக்கழகத்தினரால் நடத்தப்படும்.

7. **பதிவு செய்தல்**.- (i) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் கற்கைநெறிக்குப் பதிவுசெய்வதற்காக பின்வரும் சான்றிதழ்களின் மூலப்பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும் :-

* க. பொ. த. (உ. த.) சான்றிதழ் ;
* க. பொ. த. (உ. த.) இசற் மதிப்பீடு (Z Score) ;
* பாடசாலை விலகற் சான்றிதழ் ;
* பிறப்புச் சான்றிதழ்.

பத்திரம் / சான்றிதழ்களில் பெயர் மாற்றம் ஏதும் இருப்பின், சத்தியக்கூற்று இணைக்கப்பட வேண்டும்.

8. **முக்கிய கவனத்திற்கு**.- (i) ஒரு பரீட்சார்த்தி தேசிய தொழில்நுட்பவியல் டிப்ளோமா கற்கைநெறிக்குப் பதிவுசெய்யப்பட்டதும் அக்கற்கைநெறிக் காலத்தின்போது இந்த பல்கலைக்கழகத்திலோ இலங்கையின் வேறு எந்தப் பல்கலைக்கழகத்திலோ (இலங்கை திறந்த பல்கலைக்கழகம் தவிர்ந்த) உயர் கல்வி அமைச்சின் கீழ் வரும் எந்த ஒரு நிறுவனத்திலோ வேறு எந்த கற்கை நெறியையும் பயில்வதற்கு அனுமதி பெறுவதற்குத் தகுதியற்றவராவார்.

(ii) ஏதாவது பல்கலைக்கழகத்திலோ (இலங்கை திறந்த பல்கலைக்கழகம் தவிர்ந்த) உயர் கல்வி அமைச்சின்கீழ் வரும் உயர் கல்வி நிறுவனத்திலோ பதிவுசெய்து கொண்டுள்ள முழுநேர மாணவர்கள் தேசிய தொழில்நுட்பவியல் கற்கைநெறிக்கு விண்ணப்பிக்கவோ பதிவுசெய்துகொள்ளவோ தகுதியற்றவர்கள் ஆவர்.

பணிப்பாளர்.

தொழில்நுட்பவியல் நிறுவனம்,
மொறட்டுவைப் பல்கலைக்கழகம்,
2009.04.08.

மாதிரி விண்ணப்பப்படிவம்

INSTITUTE OF TECHNOLOGY, UNIVERSITY OF MORATUWA

Application For Admission to the National Diploma in Technology Course – Academic Year 2009/2010

| | *For office use only* | | | | |
|---|---|---|---|---|---|
| | Application No. | | | | |
| | District | | | | |

Application For (Please tick ✓ )

(i) Maritime Fields - SET 1 ☐

(ii) Other Fields - SET 2 ☐

[Applicants may apply for single set (Set 1 or Set 2) or both sets (Set 01 and Set 02)]

01. Personal Details

(Please Use **BLOCK CAPITALS**)

Name in Full :

(Leave one blank cage between names)

Name with Initials :

(Leave one blank cage between names)

| Title | Mr./Ms. | | Sex | Male/Female | | |
|---|---|---|---|---|---|---|
| Age<br>As at 31st Dec. 2008 | (Years) | (Months) | Date of Birth | Date | Month | Year |
| | | | | | | |
| National ID Number | | | | | | |

02. Contact Details

Address (Residence):

(Leave one blank cage between different segments of the address)

| | |
|---|---|
| Telephone | |
| Mobile | |
| E-mail (if available) | |

03. Results of G. C. E. (Advanced Level) Examination :

| *Subjects & Details of Examination* | *Grades & Details obtained at the* | | |
|---|---|---|---|
| | *1st Attempt* | *2nd Attempt* | *3rd Attempt* |
| Year | | | |
| Physics | | | |
| Chemistry | | | |
| Combined Mathematics | | | |
| Advanced Mathematics | | | |
| Index Number | | | |
| Z-Score | | | |
| Medium | Sinhala/Tamil/English<br>(Delete whatever is inapplicable) | | |

| | |
|---|---|
| Results of the year to be considered for Selection (indicate whether) 2006 or 2007 or 2008 | |

07. School(s) attended from Year 11 to 13

| *Year* | *Name & Address of School* | *District* | *Period of Attendance* | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | *From* | | | *To* | | |
| | | | *Year* | *M* | *D* | *Year* | *M* | *D* |
| 11 | | | | | | | | |
| 12 | | | | | | | | |
| 13<br>1st Attempt | | | | | | | | |
| 2nd Attempt | | | | | | | | |
| 3rd Attempt | | | | | | | | |

05. Certification of Results and Schools attended :

It is compulsory to certify the Results under No. 03 and Details under No. 04 in the application by the School Principal for the School Candidates, and by a Justice of Peace for External Candidates.

I certify that the particulars given above by the candidate in the cage No.3 and 4 are true and accurate according to the Original Certificates.

Name of the Principal/Justice of the peace :
Rev./Dr./Mr./Mrs. ..............................................................

Official Seal ......................., Signature ..................... Date

06. Field Preference :

Set 1 - Insert order of preference as 1 for First preference and 2 for Second preference. This should be completed only by the candidates who have applied for Maritime Studies.

Set 2 - Insert order of preference as 1, 2, 3, 4, 5, 6, 7. ‘1’ for the “Most Preferred”, ‘2’ for the next and so on ‘7’ for the last preferred.

| *Set 1* | |
|---|---|
| *Maritime Fields* | *Order* |
| Marine Engineering Technology | |
| Nautical Studies and Technology | |

| State Priority, if applied for both sets (✓) Please tick | |
|---|---|
| SET 1 | |
| SET 2 | |

| *Set 2* | |
|---|---|
| *Other Fields* | *Order* |
| Chemical Engineering Technology | |
| Civil Engineering Technology | |
| Electrical Engineering Technology | |
| Electronic & Telecommunication Engineering Technology | |
| Mechanical Engineering Technology | |
| Polymer Technology | |
| Textile & Clothing Technology | |

| | | |
|---|---|---|
| Are you registered as a fulltime student in any other University under the UGC (other than Open University) or any other Higher Educational Institution under the Ministry of Education ? (Delete whatever is inapplicable) | Yes | No. |

*Applicant's Declaration :*

(1) I declare that I am not a fulltime registered student at any University (except Open University of Sri Lanka) or any Higher Educational Institution under the Ministry of Education.

(2) I certify that all the particulars given by me in this Application are true and accurate. I am aware that if the particulars given by me in this Application are found to be false or inaccurate prior to my admission, I will be discontinued from the course.

(3) In the event of my being selected for admission after the Test, I shall abide by the Statutes, By-Laws, Regulations and the Rules of the Institute of Technology, University of Moratuwa, in so far as they are applicable to me.

(4) I have pasted the cash deposit/ cash transfer receipt obtained from Bank of Ceylon, drawn in favour of "Institute of Technology, University of Moratuwa - Account No. 0000308280 of Bank of Ceylon, Katubedde Branch".

(5) I also enclose a Self addressed stamped envelope (Rs. 40 worth) in size 9" x 4".

(6) I am aware that if I am found to be registered in another University or any other Higher Educational Institution under the Ministry of Education at the time of sitting for the Aptitude Test for the National Diploma in Technology Course, I will not be selected for the Course.

————————,
Signature of Applicant.

Date :—————.

| |
|---|
| Paste your Cash Deposit/Cash Transfer Original Slip here. |

4-600

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.